**O.S.No.158/2019**

**நாள்:25.04.2022**

***வா.சா.1, புட்டம்மாள்,***
***4,5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை,***

*இறந்த கணேசனின் முதல் மனைவி 1ம் பிரதிவாதி என்றால் சரிதான். கணேசன் இறக்கம் வரையும், தற்போது வரையும் 1ம் பிரதிவாதி உயிருடன் உள்ளார் என்றால் சரிதான். கணேசனுக்கும், 1ம் பிரதிவாதிக்கும் நீதிமன்றத்தில் விவாகரத்து ஏற்படவில்லை என்றால் சரிதான். கணேசனுக்கும், 1ம் பிரதிவாதிக்கும் காந்தி என்ற மகன் 2ம் பிரதிவாதி பிறந்துள்ளார் என்றால் சரிதான். கணேசனுக்கும், 1ம் பிரதிவாதிக்கும் 2ம் பிரதிவாதியை தவிர வேறு குழந்தைகள் இல்லை என்றால் சரிதான். கணேசனின் தாய்தந்தையர் உயிருடன் உள்ளார்களா என்றால் இல்லை. கணேசனின் பெற்றோர்கள் கணேசன் இறப்பிற்கு முன்பே இறந்துவிட்டார்கள் என்ற விபரத்தை எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால சரிதான். இறப்பு சான்றிதழ் உள்ளது. மேற்படி சான்றை நீதிமன்றத்தல் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். எனக்கும் இறந்த கணேசனுக்கும் திருமணமானதற்கான பதிவுச்சான்று ஒப்படைத்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கும் கணேசனுக்கும் 3ம் பிரதிவாதி பரிமளாகாந்தி என்ற பெண் குழந்தை பிறந்தது என்றால் சரிதான். வேறு குழந்தைகள் இல்லை என்றால் சரிதான். இறந்த கணேசனுக்கு அவர் மனைவி 1ம் பிரதிவாதி, அவர்களது குழந்தை 2ம் பிரதிவாதி, எனக்கும் இறந்த கணேசனுக்கும் பிறந்த 3ம் பிரதிவாதி ஆகியோர் வாரிசு என ஏற்கனவே வாரிசு சான்று கொடுக்கப்பட்டுவிட்டது என்றால் சரிதான். 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு கொடுத்த வாரிசு சான்றை ரத்து செய்ய நான் ஆர்.டி.ஓ.விடம் மனு கொடுத்தேனா என்றால் இல்லை. நான் கணேசனின் வாரிசு என வாரிசு சான்று மனுவை வட்டாட்சியரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. இறந்த கணேசனுக்கு அவரின் சட்டப்பூர்வமான வாரிசுதாரர்களான 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு 4ம் பிரதிவாதியால் 14.10.2017ம் தேதியே வழங்கப்பட்டுவிட்டது என்றும், நான் கணேசனுக்கு சட்டப்பூர்வமான மனைவி அல்ல என்றும், 3ம் பிரதிவாதியே இறந்த கணேசன் மூலம் ஈன்றெடுத்தன் காரணமாக மட்டுமே நான் இறந்த கணேசனின் சட்டப்பூர்வமான மனைவி அல்ல என்றாலும், ஏற்கனவே வருவாய் நிலை ஆணைப்படி 4ம் பிரதிவாதி உரிய விசாரணை செய்து 1 முதல் 3 பிரதிவாதிகள் பெயரில் கொடுக்கப்பட்ட வாரிசு சான்றிதழை செல்லத்தக்கதல்ல என்று என்னால் பரிகாரம் கோர இயலாது என்றால் சரியல்ல. 4,5 பிரதிவாதிகளிடம் இறந்த கணேசன் குறித்து எவ்விதமான வாரிசு சான்றிதழ கோரும் மனுவை தாக்கல் செய்யாமலே அதன் பேரில் எவ்விதமான உத்தரவு பெறாமல் மேலும், இறந்த கணேசனுக்கு 1 முதல் 3பிரதிவாதிகள் பெயரில் வழங்கப்பட்ட வாரிசு சான்றிதழின் பேரில் எவ்விதமான வருவாய்த்துறை மேல்முறையீடும் செய்யாமல் பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்த தாவா செலவுத்தொகையுடன் தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.*